ஈமானைத் தகர்க்கக்கூடிய விஷயங்கள்

தெளிவான மனதுடன் உணர்வுப்பூர்வமாக அல்லாஹ்வைத்தவிர வணக்கத்திற்குரியவன் வேறு யாருமில்லை, முஹம்மத் ﷺ அவர்கள் அல்லாஹ்வின் திருத்தூதராவார் என்று தன்னுடைய நாவினால் வாய்மொழிந்து அதனை மனதால் உண்மையென ஏற்று ஒருவன் உறுதிப்படுத்துவானேயானால் அவன் இஸ்லாத்தில் வந்துவிட்டான் என்பதை நாம் அறிவோம். ஆனால், இஸ்லாத்தைவிட்டே விலகிவிடாமலிருக்க, ஒரு முஸ்லிம் எந்த காரணங்களினால் இஸ்லாத்திலிருந்து ஒருவன் வெளியேறி விடுகிறான் என்ற விஷயங்களையும் அறிந்துகொள்வது மிகவும் முக்கியமானதாகும். இவ்விஷயத்தில் ஒன்று நாம் தெரிந்துகொள்ளவேண்டும், மேற்கூறப்பட்ட அடிப்படை கொள்கைகளுக்கு முரணான ஒரு கொள்கை, கோட்பாடு, சிந்தனை, நினைவு, அவ்வகையில் ஒன்றைக்கூறுவது அல்லது செய்வது ஆகிய ஏதும் நிகழ்ந்துவிட்டால் ஒருவனுடைய ஈமான் பாழாகிவிடுகிறது, நீங்கிவிடுகின்றது. لآ إِلَٰهَ إِلاَّ اللهُ என்பதன் பொருள் அல்லாஹ் மட்டுமே இரட்சகன், அவனே இறைவன் மற்றும் அவனுடைய திருநாமங்கள், பண்புகள் மற்றும் அவனையே வணங்கி வழிபட்டு அடிபணிந்து நடக்கவேண்டும் என்ற அடிப்படையான ஒன்று வாய்மொழிந்து சொல்லாலும் செயலாலும் ஏற்றுக்கொள்ளவேண்டும் மற்றும் மனதார நம்புவதாகும். இதே கலிமாவின் இரண்டாவது பகுதியான مُحَمَّدٌ رَّسُوْلُ اللهِ என்பதன் பொருள் இறைத்தூதர் ﷺ அவர்களால் கொண்டுவரப்பட்ட மார்க்கம், சட்டங்கள் மற்றும் அவர்கள் கூறியுள்ள மறைவானவை பற்றிய அனைத்து விஷயங்களும் அவற்றையெல்லாம் ஏற்று உண்மையென உறுதிப்படுத்துவதாகும். இவ்வகையிலான நம்பிக்கை மற்றும் கொள்கையுடையவர் எவரும் அல்லாஹ்வுடைய இறைமை, அவன் இரட்சகன் என்ற நம்பிக்கை அல்லது அவனுடைய திருநாமங்கள், பண்புகள், அவனை வணங்குவது அல்லது அடிபணிந்து நடப்பது ஆகிய விஷயங்களில் இதனைத்தவிர்த்து வேறு எந்த கொள்கை அல்லது மார்க்கத்தையோ மேற்கொள்ள முற்பட்டாலோ அல்லது அதில் ஏதும் கூட்டியோ குறைத்தோ அல்லது மாற்றம் செய்ய நினைத்தாலோ அவனுடைய ஈமான் சீர்கெட்டு வீணாகிவிடுகிறது மற்றும் அவனுடைய நம்பிக்கை மற்றும் ஏகத்துவக் கொள்கைக்கு மாற்றமான, முரணானதாக ஆகிவிடுகிறது. இவ்வகையில் இவனுடைய ஈமான் வீணாகி, இல்லாது போகிறது. இதுபோன்றே,இறைத்தூதர் ﷺ மற்றும் அவர்களுடைய நபித்துவத்தைப்பற்றி அவர் கொண்டுள்ள நம்பிக்கைக்கு முரணான எந்தக் கருத்தினையும் ஏற்பதோ அல்லது அவர்களுடைய ﷺ நபித்துவத்தில் சந்தேகம் கொள்வதோ அல்லது நபித்தோழர்கள் வாயிலாகவும் தாபியீன்கள் வழியாகவும், ஆதாரப்பூர்வமாக நம்மிடம் வந்தடைந்துள்ள இறைத்

www.uzairfalahi.com

தூதர் ﷺ மற்றும் அவர்களுடைய போதனைகள் பற்றிய விஷயங்களைப் பற்றி சந்தேகம் கொள்வதனாலும் அவர் மார்க்கத்தைவிட்டே வெளியேறி விடுகிறார்.

ஏகத்துவக்கொள்கையை சீரழிக்கும் காரணங்கள்

அல்லாஹ் தஆலாவைப்பற்றி அவன் மட்டுமே இரட்சகன், தனித்தவன், அனைத்துப் படைப்புகளையும் யாருடைய உதவியும் இல்லாமல் தனித்தே படைத்த படைப்பாளன் மற்றும் அதிபதியாவான். இந்த அகிலங்களை அவனே தன்னந்தனியாக பரிபாலிக்கிறான், அவனே உயிர்ப்பிக்கிறான் அவனே மரணிக்கவும் செய்கிறான், அவனே வாழ்வாதாரம் மற்றும் தேவைகளைப் பூர்த்திசெய்கிறான் என்று நம்புவதுதான் இரட்சகன் பற்றிய ஏகத்துவக் கொள்கையாகும். இதற்குப்பின் எவரும் அவனை இரட்சகன் என்று ஏற்கவில்லையென்றாலோ அல்லது வேறு யாரையும் இரட்சகனாகக் கருதினாலோ அல்லது படைப்புகளைப்பற்றி, தற்செயலாகத் தாமாகவே இந்த படைப்புகளெல்லாம் உருவாகிவிட்டன என்றோ அல்லது இவை இயற்கையான காரணங்களினால் உருவானவை என்றோ கூறுவது அல்லது இந்தப் பருப்பொருள் தொன்றுதொட்டே இருந்துவருகின்றது, இவை தாமாகவே என்றென்றும் நிலைத்திருக்கும் என்று கூறுவதோ அல்லது அல்லாஹ் மட்டுமே இரட்சகன் அல்ல என்றோ, அவனுடன் வேறு யாரும் இருப்பதாகவோ அல்லது அவனுடன் வேறு யாரும் இணைந்து செயல்படுவதாகவோ அல்லது மற்ற வேறுபட்ட சிந்தனைகள் மற்றும் கொள்கைகள் அனைத்துமே இரட்சகனின் ஏகத்துவத்திற்கு முரணானவையாகும். இவ்வாறு கருதுவது அல்லது அவற்றை ஏற்றுக்கொள்வதனால் ஒருவன் இஸ்லாத்திலிருந்து விலகிவிடுவதோடு இறைமறுப்பு மற்றும் நிராகரிப்பாளனாக ஆகிவிடுகிறான். ஃபிர்அவ்னும் இத்தகைய கொள்கையின் காரணமாகவே தன்னையே இரட்சகன் என்று கூறிக்கொண்டிருந்தான். திருக்ஃகுர்ஆனில் இதனைப்பற்றிக் கூறப்பட்டுள்ளதாவது:

فَقَالَ أَنَا۠ رَبُّكُمُ ٱلۡأَعۡلَىٰ ﴿٢٤﴾ (النازعات:24)

பொருள்: *அவர்களை அழைத்து நான்தான் உங்களின் மாபெரும் இறைவன் எனக் கூறினான் (அந்நாஸிஆத்:24)*

இவ்வாறான கொள்கையுடையவர்களை ஏற்று அவர்களை உண்மையாளர்கள் என்று கூறுவதோ அல்லது அவர்கள் கூறுவதை உண்மையென நம்புவதோ இறைமறுப்பு அல்லது குஃப்ரு எனப்படும்.

இறைவனின் ஏகத்துவக்கொள்கையைத் தகர்க்கும் காரணங்கள்:

வணக்கத்திற்குரியவன் அல்லாஹ் ஒருவன் மட்டுமே. கட்டளைகளுக்குக் கீழ்ப்படிவதும் அடிபணிவதும் அவன் ஒருவனுக்கு மட்டுமே என்பது இறை

www.uzairfalahi.com

வனின் ஏகத்துவமாகும். இதற்கு மாறாக, ஒருவர் மற்ற யாரையும் வணங்கி அவனுக்குக் கீழ்ப்படியும் கொள்கையையோ அல்லது வெளிப்படையாகவே யாரையும் வணங்கி வழிபட்டாலோ அல்லது அவ்வாறான கொள்கையைக் கொண்டிருந்தாலோ, அது முழு அளவிலான மனப்பூர்வமான ஒன்றாகவோ அல்லது சில அம்சங்களில் மட்டுமோ இருந்தாலும் அது அல்லாஹ்வின் ஏகத்துவத்தின் உரிமையை நிராகரிப்பதாகும் மற்றும் வெளிப்படையான இறைமறுப்பாகும். இத்தகைய ஒருவர் இஸ்லாமிய மார்க்கத்தை விட்டே விலகிவிட்டவராக ஆகிவிடுவார். பொதுவாகவே, மனிதர்கள் இவ்விதமான போக்கின் காரணத்தினால்தான் நிராகரிப்பாளர்களாகவும் இறைமறுப்பாளர்களாகவும் நடந்துகொள்கின்றனர். கடந்த காலங்களிலும் இன்றும்கூட மக்கள் அல்லாஹ்வை (இறைவனை) படைப்பாளனாக, இரட்சகனாக, அனைத்துத் தேவைகளையும் அருளுபவனாகவும் படைப்புகள் அகிலங்கள் அனைத்தையும் பரிபாலிப்பவனாகவும் திருக்ஃகுர்ஆனிலும் கூறப்பட்டுள்ளதுபோலவே ஏற்றுக் கொள்ளத்தான் செய்கின்றனர். திருக்ஃகுர்ஆன் கூறுகின்றது:

وَلَئِن سَأَلْتَهُم مَّنْ خَلَقَهُمْ لَيَقُولُنَّ ٱللَّهُ ۖ فَأَنَّىٰ يُؤْفَكُونَ ﴿٨٧﴾ (الزخرف:87)

பொருள்: இவர்களைப் படைத்தவன் யார் என்று நீர் இவர்களிடம் கேட்டால், அல்லாஹ் என்று இவர்களே கூறுவார்கள், பிறகு, எங்கிருந்து இவர்கள் திசை திருப்பப்படுகிறார்கள்? (அஸ்ஸுக்ஹ்ருஃப்:87)

ஆனால், இவ்வாறு ஏற்றுக்கொண்ட பின்னரும் பொதுவாகவே மக்கள் இந்த உறுதிமொழி அல்லது ஏற்றுக்கொண்ட கொள்கைகளின் அடிப்படையில் நடந்துகொள்வதில் தவறிவிடுகின்றனர். இறைவணக்கம் மற்றும் அவனுடைய கட்டளைகளுக்கு அடிபணியவேண்டும் என்ற நிலை வரும்போது அதனைப் புறக்கணித்துவிடுகின்றனர் அல்லது இறைவணக்கத்தில் எதையும் இணை வைத்துக்கொள்கின்றனர், அது அவர்களுடைய இச்சைகளாக இருப்பினும் சரியே. உண்மையில், இதுதான் அடியார்களின் விசுவாசத்தின் உண்மை நிலையின் சோதனைக்கான நேரமாகும், அதில் பெரும்பாலானோர் தோல்வியடைந்துவிடுகின்றனர். இந்தக் கட்டம் மிகவும் நுணுக்கமான, ஆபத்தான கட்டமாகும். இறை மறுப்பும் இணைவைப்பும் இந்நிலையில்தான் பெரும்பாலும் தலைதூக்குகின்றன. ஏகத்துவத்தை மக்கள் ஒரு அறிவுப்பூர்வமான கொள்கையாக ஏற்றுக்கொண்டாலும், வாழ்க்கையில் அதன் அடிப்படைகளைக் கடைபிடிப்பதில், அதன் தேவைகளை நிலைநாட்டும் வகையில் நடந்துகொள்ள முடிவதில்லை. இவ்வகையில் மக்கள் இறைமறுப்பு மற்றும் இணைவைப்புக்கு ஆளாகிவிடுகின்றனர். இது எவ்வாறு ஏற்படுகின்றது என்றால், துவக்கத்தில் மக்களுடைய மனங்களிலிருந்து அல்லாஹ்வின் பயம் நீங்கிவிடுகின்றது, அதன் பின் மக்கள் படிப்படியாக மாறு செய்யும் தைரியத்தைப் பெற்றுவிடுகின்றனர். இதன்

www.uzairfalahi.com

காரணமாக மக்களுடைய மனங்களில் அல்லாஹ்வைக்கொண்டு நாம் ஏன் பயப்படவேண்டும் என்ற ஒரு மனநிலை உருவாகிவிடுகின்றது. இவ்வகையில், அல்லாஹ்வுடனான நெருங்கிய உறவு குலைந்துவிடுவதன் காரணமாகவும், உடனே ஒன்றைப் பெறவேண்டும் என்ற மனப்பாங்கின் காரணமாகவும் அவர்கள் வேறு இடங்களைத்தேடி அலைகின்றனர், மற்றவர்களிடம் உதவி நாடுபவர்களாக மாறிவிடுகின்றனர், தவறான கொள்கை ரீதியான தாக்கங்களுக்கு ஆளாகிவிட்ட நிலையில் தொழுகை, நோன்பு, ஹஜ், ஜ்ஸகாத், மற்ற இறை வணக்க முறை மற்றும் கடமைகளை கேலிக் கூத்தாக ஆக்கிவிடுகின்றனர், அடுத்தக் கட்டமாக அவர்கள் மனதில் இஸ்லாமிய மார்க்கம் நவீன காலக்கட்டத்திற்கு ஏற்ற, உடன்பாடுகொண்ட மார்க்கமாக இருக்கமுடியாது என்ற தவறான எண்ணத்திற்கு ஆளாகிவிடுகின்றனர். இஸ்லாமியச் சட்டங்கள் மற்றும் மார்க்க (ஷரீஅத்) அடிப்படையிலான சட்டதிட்டங்கள் கடந்த கால கலாச்சார வளர்ச்சியின் ஒரு பகுதியாகக் கருதப்பட்டு, இவை தற்கால நவீன கலாச்சாரச் சுற்றுச்சூழலுக்கு உகந்ததாக இல்லை எனவும் கருதப்பட்டுவிடுகின்றன. இவ்வகையில், அவர்கள் பெயரளவில் முஸ்லிம்களாகத் தென்பட்டாலும் அவர்கள் இஸ்லாமியக் கொள்கைகளுக்குப் புறம்பானவர்களாக, விட்டு விலகியவர்களாகவே கருதப்படுவர். ஏனெனில், இஸ்லாமிய மார்க்கச்சட்டங்கள் மற்றும் விதிமுறைகள் அனைத்துமே இறைவனின் ஏகத்துவத்தின் பிரதிபலிப்பாகவும் அதற்கான ஆதாரமாகவும் செயல் ரீதியாகக் கடைபிடிக்கப்படவேண்டியவையாகவும் உள்ளன. திருக்ஃகுர்ஆன் கூறுகின்றது:

إِنِ ٱلْحُكْمُ إِلَّا لِلَّهِ ۚ ﴿٤٠﴾ (يوسف:40)

பொருள்: ஆட்சி செலுத்தும் அதிகாரம் அல்லாஹ்வைத்தவிர வேறு யாருக்கும் இல்லை (யூசுஃப்:40)

மற்றொரு இடத்தில் கூறப்பட்டுள்ளது:

فَٱلْحُكْمُ لِلَّهِ ٱلْعَلِىِّ ٱلْكَبِيرِ ﴿١٢﴾ (غافر:12)

பொருள்: இனி தீர்ப்பு வழங்குவது மேலானவனும் உயர்ந்தவனுமாகிய அல்லாஹ்வின் அதிகாரத்தில் உள்ளது (ங்காஃபிர்:12)

அல்லாஹ்வைத்தவிர யாரை வணங்கினாலும் அது இறை மறுப்பு (குஃப்ரு) ஆகும், அவ்வாறே தன்னையே வணங்கி வழிபடுமாறு அழைப்பதும் இறை மறுப்பு (குஃப்ரு) ஆகும். மக்களை ஒன்றிற்குமுன் சிரம் பணியுமாறும், அதற்கு முன்பாகத் தலை குனியுமாறு கூறுவதும், அவற்றின் மீது முழுமையாக நம்பிக்கை கொள்ளுமாறு கூறுவதும், அல்லாஹ்வுக்கே உரிய சில குறிப்பிட்ட பண்புகளை தமக்கும் ஆகுமானதாக ஆக்கிக் கொள்வதும் இறை மறுப்பு (குஃப்ரு) ஆகும். மனிதன் அல்லாஹ்வின் கட்டளைகள் இருந்தும் அவன் தமக்கென தன்னிச்சையாகச் சட்ட திட்டங்

www.uzairfalahi.com

களை அமைத்துக்கொள்வதும் இறை மறுப்பு (குஃப்ரு) ஆகும், அல்லாஹ் ஹலால் (ஆகுமானவை) மற்றும் ஹராம் (தடுக்கப்பட்டவை) என்று நிர்ணயித்திருப்பதைப் பொருட்படுத்தாமல் தாமே தான் விரும்பியதை ஹலாலாகவும் ஹராமாகவும் ஆக்கிக்கொள்வது, உதாரணமாக, விபச் சாரத்தை அனுமதிக்கும் வகையில் அதனை ஹலால் எனக் கருதுவது, வட்டியை ஹலால் எனக் கூறுவது, அல்லாஹ்வால் நிர்ணயிக்கப்பட்ட தண்டனைகளை நிக்கிவிடுதல், இவையனைத்தும் தாமே இரட்சகன் அல்லது தன்னையே ஆட்சியதிகாரமுடையவனாக, ஆண்டவனாக ஆக்கிக் கொள்ள முயற்சிப்பதாகும், இவையனைத்தும் வெளிப்படையாகவே இறை மறுப்பு (குஃப்ரு) ஆகும்.

அல்லாஹ்வின் திருநாமங்கள் மற்றும் பண்புகளின்மீது ஈமான் கொள்வது மற்றும் அதன் நுணுக்கங்கள்:

அல்லாஹ்வின் திருநாமங்கள் மற்றும் பண்புகளின் அடிப்படையில் ஏகத் துவத்தின் பொருள் என்னவெனில், திருக்ஃகுர்ஆன் மற்றும் நபிமொழி களில் எந்த மகத்தான பண்புகள் மற்றும் மகிமைகளைப்பற்றிய செய்திகள் கூறப்பட்டுள்ளனவோ அவற்றின்மீது முழுமையாகவே நம்பிக்கை கொள்ள வேண்டும், மேலும் இந்தப் பண்புகளை அல்லாஹவுக்கு மட்டுமே உரித்த தாக ஆக்குவது, அத்துடன் இதே பொருள் மற்றும் தன்மைகளையுடைய பண்புகளில் யாரையும் இணையாக்கவும்கூடாது இணைக்கவும் கூடாது என்பதாகும். இதுபோன்றே, திருக்ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளில் அல்லாஹ் தஆலா அனைத்துவித குறைகள், குறைபாடுகளிலிருந்தும் அப்பாற்பட்டவன், தூய்மையானவன் என்று கூறப்பட்டுள்ள வகையி லேயே அவற்றின்மீது முழுமையாகவே நம்பிக்கை கொள்ள வேண்டும், அவ்வாறு செய்யாவிட்டால் அதுவும் இறை மறுப்பு (குஃப்ரு) ஆகிவிடும்.

உதாரணமாக, திருக்ஃகுர்ஆன் மற்றும் நபிமொழிகளில் அல்லாஹ் பேராற்றல் மற்றும் வல்லமை படைத்தவன், அவன் பரிபாலிப்பவன், அவன் அனைத்தையும் பார்த்துக்கொண்டிருக்கின்றான், அவன் அர்ஷ் எனும் சிம்மாசனத்தில் நிலைகொண்டிருக்கின்றான், அவனுக்கு கடந்த காலம், எதிர்காலம் ஆகியவற்றின் பூரண அறிவு இருக்கின்றது என்றெல் லாம் நமக்குக் ஆதாரப்பூர்வமாகக் கூறப்பட்டுள்ளது. இவற்றையெல்லாம் அறிந்தபின்பும் அவனுடைய இப்பண்புகளை நிராகரிப்பவன் இறை மறுப்பாளன் (காஃபிர்) ஆகிவிடுவான். உதாரணமாக, எவரும் அல்லாஹ் வுடைய ஞானம் அனைத்தையும் அவன் பொதுவான நிலையில் அறிவான், அவன் அவற்றின் பகுப்பாய்வு மற்றும் விவரங்களை அறியமாட்டான் என்ற கருத்து மற்றும் கொள்கையுடையவன் இறைமறுப்பாளனாகவே இருப்பான், அல்லது அல்லாஹ்வின் இயற்பண்புகளை படைப்புகளின் பண்புகளுடன் ஒப்பிடுபவனும் இறைமறுப்பாளனேயாவான். அதாவது,

www.uzairalahi.com

நாம் எவ்வாறு பார்க்கின்றோமோ, எவ்வாறு கேட்கின்றேமோ அல்லது நாம் எவ்வவாறு பேசுகின்றோமோ முற்றிலும் அதே போன்று அல்லாஹ் தஆலாவும் பார்க்கின்றான், பேசுகின்றான் மற்றும் கேட்கின்றான் என்று கூறுவது, அவனுடைய இயற்பண்புகளை படைப்பினங்களின் பண்புகளைப் போன்றவை என்று கருதுவது இறைமறுப்பாகும் (குஃப்ரு). இது போன்றே, எவரும் அல்லாஹ்வுக்கு மனைவி மக்கள் இருக்கின்றார்கள் என்று கருதுவது, அவனுக்கும் உறக்கம் வரும் என்றும், அவன் மரணிக்கின்றான் என்றும் அவனும் நினைவிழந்துவிடுகிறான் என்று கருதுவதும் அவற்றை ஏற்றுக்கொள்வதும் இறை மறுப்பு (குஃப்ரு) ஆகிவிடும். இவ்வாறே, அல்லாஹ்வின் இயற்பண்புகளில் எவரையும் இணைப்பதும் இணை வைப்பு மற்றும் இறை மறுப்பு (குஃப்ரு) ஆகிவிடும். உதாரணத்திற்காக, ஒருவன் அல்லாஹ்வின் ஞானத்தைப்போன்ற ஞானம் என்னிடமும் உள்ளது என்று கருதினால், அல்லாஹ் எந்த அளவிற்கு அறிகின்றானோ நானும் அதே அளவிற்கு அறிந்தவனாக இருக்கின்றேன் என்று ஒருவன் கூறிக்கொள்வதும் அல்லது அவ்வாறு கூறுபவர்களுடைய வாதத்தை ஏற்றுக்கொள்வதும் இறை மறுப்பு (குஃப்ரு) ஆகிவிடும்.

நபித்துவம் மற்றும் அதன் முக்கியத்துவத்தை ஏற்க மறுப்பதும் இறைமறுப்பாகும்

மறைவானவற்றின் உண்மைகள், அல்லாஹ்வின் நாட்டம் மற்றும் அவனுடைய வழிகாட்டுதல்கள் பற்றிய அறிவும் செய்திகளும் நமக்கு நபித்துவத்தின் இந்த ஏற்பாட்டின் மூலமே கிடைக்கப்பபெறுகின்றன. இறைத்தூதர்கள் மற்றும் அவர்கள் மீது அருளப்படும் அருள்வாக்கு (வஹி) ஆகியவற்றைப்பற்றி அதனுடைய உறுதிப்பாடு, உண்மை, நம்பகத்தன்மை மற்றும் ஆதாரத்தை சீர்குலைக்கும் வகையில் ஒன்றைக் கருதுவது, அதனைப்பற்றிப் பேசுவது அல்லது எதையும் செய்வது அல்லது அதனுடைய அந்தஸ்தைக் குறைத்துப்பேச நினைப்பது எல்லாமே ஒருவருடைய ஈமான் பறிபோவதற்குக் காரணமாக அமையும். நாம் கலிமாவின் இரண்டாவது பகுதியான مُحَمَّدٌ رَّسُولُ اللهِ வை மொழியும்போது, இறைத்தூதர் ﷺ அவர்கள் பாதுகாக்கப்பட்ட பாவமறியாதவர்கள் என்று மனதார ஏற்றுக்கொள்கிறோம். அவர்கள் அல்லாஹ்வினால் அருளப்பட்ட வஹியை முழுப்பாதுகாப்புடன் எடுத்துரைத்திருக்கின்றார்கள், அவர்கள் தன்னுடைய சொல்லாலும் செயலாலும் அதனையே பிரதிபலிக்கும் வகையில் முன்மாதிரியாகச்செய்துகாட்டியும் உள்ளார்கள். ஒரு மனிதரிடம் எந்தக் குறைபாடுகள் இருந்தால் இந்த மகத்தான பொறுப்பினை நிறைவேற்ற இயலாதோ அவையனைத்திலிருந்தும் அவர்கள் அப்பாற்பட்டவர்களாக, நிறைவான ஆற்றலுடையவர்களாக இருந்தார்கள். அவர்களுடைய உண்மை, அமானிதப்பண்பு, ஒழுக்கம், கற்பொழுக்கம் மற்றும் சீரான இயல்புகள் அனைத்துமே நாம் ஏற்றுக்கொண்டுள்ளோம். இவ்வகையில், இந்தக் குறைகள்

www.uzairfalahi.com

இருந்ததாக எண்ணுவதும் இறை மறுப்பாகவே (குஃப்ரு) ஆகிவிடும். அவர்களைப்பற்றிக் கேலியாகப் பேசுவது அல்லது அவர்களுடைய சுன் னத்தான எந்த விஷயத்தைப்பற்றியும் குறை கூறுவது அனைத்துமே அவர் களுடைய எந்த உயர்வான பண்புகளைப்பற்றி மனதார சான்று கூறுவது ஈமானின் பகுதியாக உள்ளதோ அவையனைத்தையும் அவர்களுடைய உயர்வான அந்தஸ்தினையும் மறுப்பதற்குச் சமமாகும். ஆகவே, இவை யெல்லாம் இறைமறுப்புக்கு வழிவகுக்கக்கூடியவையாக இருக்கின்றன. இதுபோன்றே, திருக்ஃகுர்அனில் கூறப்பட்டுள்ள உண்மைகள் அனைத் தின்மீதும் ஈமான் கொள்வது இன்றியமையாததாகும். திருக்ஃகுர்ஆன் மற்றும் ஸஹீஹான நபிமொழிகளில் ஆதாரப்பூர்வமான முறையில் கூறப்பட்டுள்ள மறைவானவை பற்றிய உண்மைகள், அவை நம்முடைய அறிவுக்கு எட்டாதவைகளாக இருந்தாலும், அவற்றை ஏற்க மறுப்பதோ அல்லது அதில் சந்தேகங்களை எழுப்புவதோ ஈமானையே வீணாக்கிவிடு வதற்குக் காரணமானவையாக ஆகிவிடும், உதாரணமாக, மறுமையின் மறைவான விஷயங்களான மீஜ்ஸான் (தராசு), மரணத்திற்குப்பின்பு மீண் டும் உயிர்ப்பித்தெழுப்பப்படுதல், கேள்வி கணக்கு, ஸிராத் பாலம், சுவர்க் கம், நரகம், ஜின்னுகள், வானவர்கள், லவ்ஹ் எனும் பலகை மற்றும் எழுது கோல், அர்ஷ் சிம்மாசனம் மற்றும் குர்சி (இருக்கை) ஆகியன. இது போன்றே, திருக்ஃகுர்ஆன் மற்றும் ஸஹீஹான நபிமொழிகளில் ஆதாரப் பூர்வமான முறையில் கூறப்பட்டுள்ள கட்டளைகளை, உதாரணமாக, ஒருவர் விபச்சாரம் ஹராமானது அல்ல என்று கூறுவது, மதுபானம் மற்றும் திருட்டு ஹராமானது அல்ல என்று கூறுவது, அல்லது தொழுகை, நோன்பு, ஹஜ், ஜ்ஸகாத் ஆகிய கடமையான வணக்கங்களை ஏற்க மறுப்பது, அல்லது அவற்றில் கூட்டிக் குறைப்பது, உதாரணமாக, தொழுகையில் ஒரு ரசஅத்து கூடுதலாகத் தொழுவது அல்லது உதூ செய்யாமலேயே தொழு வது கூடும் எனக் கூறுவது ஆகியன மறுப்பதற்குச் சமமாகும். ஆனால், ஒருவர் இஜ்திஹாத் முறையில் ஆய்வு செய்து திருக்ஃகுர்ஆன் வசனங்கள் மற்றும் நபிமொழிகளின் அடிப்படையில் தன்னுடைய கருத்தினை உகந்த முறையில் கூறுவது என்பது வேறு விஷயமாகும். மாறாக, பொதுவாகவே உறுதிப்படுத்தப்பட்டு வழக்கிலுள்ள சட்டதிட்டங்கள், கட்டளைகளில் மாற்றங்கள், ஹராமானவை ஹலாலானவை என்று கட்டளையிடுவது அல்லாஹ் மற்றும் இறைத்தூதர் ﷺ அவர்களுக்கு மட்டுமே உரிமை யுண்டு. அவ்வாறு எவரும் ஆக்கிக்கொள்ள முற்பட்டால் அவர் தன்னு டைய ஈமானையே இழந்துவிடுவார். இறைத்தூதர் முஹம்மத் ﷺ அவர் கள் மீதான ஈமானுடன் முன்பு வருகை தந்துள்ள அனைத்து நபிமார்கள் மீதும் ஈமான் கொள்வது கட்டாயமானதாகும். அவர்களில் ஒருவர்மீதும் ஈமான் கொள்ள மறுப்பதும் இறை மறுப்பு (குஃப்ரு) ஆகிவிடும். இது போன்றே, இறுதி நபியான இறைத்தூதர் முஹம்மத் ﷺ அவர்களுக்குப்

www.uzaifaahi.com

பின்பும் வேறு எவரையும் நபி அல்லது இறைத்தூதர் என்று கருதினால் அல்லது ஒருவர் கூறிக்கொண்டால் அதுவும் இறை மறுப்பு (குஃப்ரு) ஆகி விடும். உதாரணமாக, ஃகாதியானி அல்லது பஹாயி ஆகியவர்கள் தங் களை நபியென அறிவித்துக் குழப்பத்தை ஏற்படுத்தியதோடு அவர்கள் இறைமறுப்பாளர்களாகவும் ஆகிவிட்டனர்.

* * *

www.uzairfalahi.com